## மதுரையில் மக்கள் கண்காணிப்பகம் அலுவலகத்தில் சி.பி.ஐ. சோதனை:

# பா.ஜ.க. அரசு தொடுத்துள்ள சனாதன தாக்குதல்

## திருமாவளவன் கண்டனம்

சென்னை, ஜன.11-

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் புகழ்பெற்ற மனித உரிமை அமைப்பான மக்கள் கண்காணிப்பகத்தின் மீது வழக்குப்பதிவு செய்து அதன் அலுவலகத்தில் சி.பி.ஐ. சோதனையிட்டு உள்ளது. இந்தியா முழுவதும் உள்ள மனித உரிமை அமைப்புகள் நன்கொடை பெறும் வாய்ப்பை மறுப்பதும் அவர்களின் செயல்பாடுகளை முடக்குவதுமாக மோடி அரசு தொடுத்துள்ள சனாதனத் தாக்குதலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஒருபுறம் மக்களுக்காக செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை முடக்குவது, இன்னொருபுறம் வெறுப்புப் பிரசாரத்தில் ஈடுபடும் இந்துத்துவ அமைப்புகளுக்கு வெளிநாட்டு பணத்தை அதிக அளவில் பெறுவது என்ற முறையில் பா.ஜ.க. அரசு செயல்பட்டு வருகிறது.

மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்புகள் மீது பா.ஜ.க. அரசு தொடுத்துள்ள இந்த சனாதன தாக்குதலைக் கண்டிப்பதும் இந்த அமைப்புகளைப் பாதுகாப்பதும் ஜனநாயக சக்திகளின் கடமையாகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.